<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

<u>O.S.No.208/2024</u>

| | |
|---|---|
| பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | **பி.சா. 2** |
| பெயர் | திருமதி. இந்திரா |
| கணவரின் பெயர் | திரு. சண்முகம் |
| கிராமம் | புரிசை |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | – |
| வயது | 45 |

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 07-11-1984 | தேதியிட்ட கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் - பி.சா.ஆ.21. |
| 2. | 06-11-1984 | தேதியிட்ட கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் - பி.சா.ஆ.22. |
| 3. | - | காதணி விழா அழைப்பிதழ் - பி.சா.ஆ.23. |
| 4. | 26-04-2023 | சாமிநாதபிள்ளை எழுதிக்கொடுத்த ஆவணம் - பி.சா.ஆ.24. |

எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :**

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.09 19:47:43 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**